செய்திக்குறிப்பு

# ஸ்ரீ இராமச்சந்திராவில் காக்லியர் சிகிச்சை
# காது கேளாத குழந்தைகளின் மழலை சொல் கேட்ட மகிழ்ச்சி

சென்னை,
20 ஜனவரி, 2010.

காது கேட்காத உலகத்திலிருந்து, காது கேட்டு, பேச்சு, மொழி, மற்றவர்களோடு தம் குழந்தைகள் உறவாடுவதை காணும் மகிழ்ச்சி, ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் இன்று காக்ளியர் அறுவை சிகிச்சை மேற்கொண்ட பல குழந்தைகளின் பெற்றோருக்கும் மருத்துவ குழுவினருக்கும் ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளுக்கு முன் மண்டை ஒட்டுக்கு உள்ளே உள் காதில் காக்களியர் அறுவை சிகிச்சை செய்து கொண்ட கல்யாணி என்ற சிறுமி இன்று பேசி, பாடி, ஆடும் அழகை அவருடைய பெற்றோர் மட்டுமின்றி மருத்துவ குழுவினரும் மற்றவர்களும் கண்டு மகிழ்ந்தனர். காக்ளியர் அறுவை சிகிச்சையில் தனது நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் கல்யாணி போல் பல குழந்தைகளும் அவர்களுடைய பெற்றோர்களும், இந்த அறுவை சிகிச்சை செய்ய நினைக்கும் குழந்தைகளின் பெற்றோர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். அப்போது பேசிய, காது மூக்கு தொண்டை, அறுவை சிகிச்சை துறை தலைவர் Dr. ரவிகுமார், ஏற்கனவே இவர்கள் போன்று 16 பேர் அறுவை சிகிச்சை செய்து கொண்டு பேசத் துவங்கியுள்ளனர் என்று கூறினார்.

அப்போது பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைகழக துணை வேந்தர் பேராசிரியர் S. ரங்கசாமி, டாக்டர்களும், பேச்சு, மொழி மற்றும் கேட்பியல் துறையினறையும் குறிப்பாக பெற்றோர்களையும், குழந்தைகளுக்கு அன்பாக, அலுக்காமல் தொடர்ந்து சிகிச்சையும் பயிற்ச்சியையும் அளித்தார்க்காக பாராட்டினர்.

அறுவை சிகிச்சைக்குப் பின் தொய்வில்லாமல் தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை, பேச்சு மொழி மற்றும் கேட்பியல் துறையின் இணை பேராசிரியர் Dr. பிரகாஷ் பூமிநாதன் வலியுறுத்தினார்.

-----------------------------------------------------

மேலும் விபரங்களுக்கு, Dr. A. ரவிகுமார், துறை தலைவர், காது மூக்கு தொண்டை துறை, ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைகழகம் - 9840433002

T.G. நல்லமுத்து, Consultant, Media Relations, SRU, 9444265578, nallamuthu@hotmail.com